DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 3/2022 |
| Deposition of Witness for | : | P.W. 9 |
| Name | : | **திரு.பாலமுருகன்** |
| Father's Name | : | **முத்துராமன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | **சார்பு ஆய்வாளர்** |
| Age | : | **37/2026** |

**(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 06.04.2026

**(சாட்சி காணொளி வாயிலாக ஆஜராகி அவரது சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது திருப்பூர் மாவட்டம், மூலனூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.02.2021ம் தேதி திருப்புவனம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக காலை 10.00 மணியளவில் நான் நிலையத்தில் இருந்தபோது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த திருப்புவனம் தாலுகா கலியாந்துார் கிராமத்தை சேர்ந்த ஆதிமூலம் மகன் சேங்கை சாமி என்பவர் தீவிர சிகிச்சைப்பிரிவில் மயக்க நிலையில் இருந்ததால் அவருக்கு உதவியாக இருந்த

அவரது மகன் தினேஷ்வரன் என்பவரிடம் சம்பவம் பற்றி விசாரிக்கும்போது அவர் ஒரு எழுத்து பூர்வமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார்.

2. நான் அந்த எழுத்து பூர்வமான புகார் மனுவினை பெற்று அன்றைய தினம் மதியம் 12.30 மணியளவில் திருப்புவனம் காவல்நிலையத்திற்கு வந்து புகார்மனுவின் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.67/2021 இதச பிரிவுகள் 294 பி, 307 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை எதிரி நான் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **அச்சிட்ட முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.6** ஆகும். பின்பு புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு நகலை விசாரரணைக்காக காவல் ஆய்வாளர் ஏழுமலை என்பவர் பார்வைக்கு வைத்தேன். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.06 16:51:38 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**